ALAGAPPA UNIVERSITY

DEPARTMENT OF LIFELONG LEARNING

# MEDIA - 2016

**Editorial Team**

| | |
|---|---|
| **M. Ramya** | M.Phil |
| **M. Parthiban** | MJMC II Year |
| **Vijayalaxmi Arumugam** | MJMC II Year |
| **SM. Ranjitha** | MJMC II Year |
| **T. Vinothnadhan** | MJMC I Year |

**Advisors**

**Prof. P. SIVAKUMAR**
Head incharge

**Dr. R. Rajan**
Associate Professor

**Dr. N. Johnson**
Assistant Professor



**DEPARTMENT OF LIFELONG LEARNING**
**ALAGAPPA UNIVERSITY**
Karaikudi.

## உள்ளே...

General Knowledge

டாக்டர் பட்டம் வாங்கிய காரைக்குடி இசைக் கலைஞர்

Organ Donation

இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் சாதனை

பொது அறிவு

மன அழுத்தம் தடுக்கும் வழிமுறைகள்

இந்தியாவில் முதல் பெண் போட்டோகிராபர்

நகைச்சுவை

Noble Prize Winners - 2016

Ten Golden Principles

Rhymes from the Heart

அறிந்து கொள்வோம்

முயற்சி செய்வோம்

கொய்யாவின் சிறப்பு

Why? When? How? - It happen - The Celebration of Diwali

உலகை அடக்கிய செல் போன் உலகம்

ஒருநாள் பயிற்சி பட்டரை

Social Issue

ஊடகம்


சிறுகதை

கிராமப்புற வளர்ச்சியில் மாணவ மாணவிகள்

2016 ஒரு கண்ணோட்டம்

இணையம் காணும் வெள்ளி விழா

Poetry - Social Media




# General Knowledge Question & Answers

1. First Malayalam movie?
   **Vigatha Kumaran**
2. India's first mission to the moon. "Chandrayan-1" was launched on?
   **October 22, 2008.**
3. The National flag of India is adopted in?
   **July 22, 1947**
4. A world earth day is observed on?
   **April 22**
5. World Water day? **March 22**
6. Father of Electricity – **Michel Faraday**
7. Who has been awarded the first lifetime achievement award for his/her contribution in the field of cinema?
   **Ashok Kumar**
8. The social network medium that has gone for global IPO recently is?
   **Facebook**
9. B.C. Roy award is given in the field of?
   **Medicine**
10. Panachayat Raj was started in India on?
    **1959**
11. Article of the Indian constitution, which is of a temporary nature grants special status to Jammu and Kashmir?
    **Article 370**
12. The India Gate, the National monument of India located in? **New Delhi**
13. Vitamin which helps for clotting of blood? **Vitamin K**
14. Bokaro steel plant is located in?
    **Jharkhand**
15. Study of birds is called? **Ornithology**
16. 'Yanthram' novel written by?
    **Malayattor Ramakrishnan**
17. World literary day is observed on?
    **September 8**
18. Old name of Myanmar? **Burma**
19. Currency of Russia? **Ruble**
20. First Hydroelectric Project of Kerala state is?
    **Pallivasal Hydroelectric Project.**

**V. Anitha**
(M.Phil., - Media & Communication)

# Riddles

1. A seven letter word containing thousands of letters? **-Mail Box**
2. What can travel around the world while staying in a corner? **-A stamp**
3. What has a head and a tail, but no body? **-A coin**
4. What kind of room has no doors or windows? **-A mushroom**
5. What kind of tree can you carry in your hand **-A palm**

**Siva Bharathi.H**
(II - MJMC)

# Doodles

A doodle is a drawing made while a person's attention is otherwise occupied. Doodles are simple drawings that can have concrete representational meaning or may just be composed of random and abstract lines, generally without ever lifting the drawing device off of the paper, in which case it is usually called a "scribble".

Doodling and scribbling are most often associated with young children and toddlers, because their lack of hand–eye coordination and lower mental development often make it very difficult for any young child to keep their colouring attempts within the line art of the subject. Other common examples of doodling are produced during long telephone conversations if a pen and paper are available. Popular kinds of doodles include cartoon versions of teachers or companions in a school, famous TV or comic characters, invented fictional beings, landscapes, geometric shapes, patterns and textures.

The word doodle first appeared in the early 17th century to mean a fool or simpleton. It may derive from the German Dudeltopf or Dudeldop, meaning simpleton or noodle (literally "nightcap"). It is the origin of the early eighteenth century verb to doodle, meaning "to swindle or to make a fool of". The modern meaning emerged in the 1930s either from this meaning or from the verb "to dawdle", which since the seventeenth century has had the meaning of wasting time or being lazy.

**M. Arunkumar**
(I - MJMC)

## டாக்டர் பட்டம் வாங்கிய காரைக்குடி இசைக் கலைஞர்



காரைக்குடி அருகே உள்ள ஆத்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த இளைய கானம் இளையராஜா அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக்கழகம் அவரது கிராமிய இசையைப் பாராட்டி கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியது. அவரது கல்லூரிக் காலம் முதல் இசை மீது கொண்ட ஆர்வத்தினால் அவருடைய கல்லூரியில் உள்ள இசைக் குழுவில் இணைந்து தனது இசைப் பயணத்தை தமிழ்த்தாய்க் கலைக்கூடம் நடத்திய மாநில அளவிலான 'நீங்களும் பாடலாம்' என்ற இசைப்போட்டியில் முதல் பரிசு பெற்றார். அதுவே அவரது இசைப்பயணத்தின் ஆரம்பமாக இருந்தது. 'இளைய கானம்' என்ற இசைக்குழுவை ஆரம்பித்தார். பின்னர் திரைப்படத்தின் மூலம் பிரபலமானார்.

அதனைத் தொடர்ந்து 'அத்தமக உன்ன நெனச்சு', 'வாடி ஏ கருத்தப்புள்ள' 'கண்ணே உன்ன காணாம', 'பூங்குயிலே பூ மயிலே' போன்ற பாடல்களின் மூலம் உலகின் அனைத்து கிராம இளைஞர்களின் மனதைக் கவர்ந்தார். இன்று இணைய தளத்தில் அவரது இசை ஆல்பம் 7 இலட்சத்திற்கும் மேல் ரசிகர்களைப் பெற்றது. நமது அழகப்பா கலைக் கல்லூரியில் பி.ஏ. பொருளாதாரம் பயின்றவர் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

**அ. கார்த்திகேயன்**
M.Phil.,
Media & Communication

## இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின் சாதனை



இந்தியா சுழற்பந்து வீச்சாளரும் தமிழக வீரருமான ரவிச்சந்திரன் அஸ்வின் டெஸ்ட் போட்டிகளில் அதிகமுறை தொடர்நாயகன் விருதினை பெற்று சாதனை படைத்துள்ளார்.

இந்திய அணியின் முக்கிய சுழற்பந்து வீச்சாளராக திகழும் அஸ்வின் தமிழகத்தை சார்ந்தவர் ஆவார். வலது கை சூழற்பந்து வீச்சாளரான அஸ்வின் சிறந்த ஆல்ரவுண்டரும் ஆவார். இவர் 6.11.2011ம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் அறிமுகமானார். அறிமுக தொடரிலே தொடர்நாயகன் விருதினைப் பெற்ற சிறப்புடையவர்.

39 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ள இவர் 220 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அதிக முறை தொடர் நாயகன் விருதினைப் பெற்ற இந்திய வீரர் என்ற சாதனையைப் பெற்றுள்ளார்.

முன்னாதாக சச்சின், ஷேவாக் இந்த சாதனையை பெற்று இருந்தன. அவர்களின் சாதனையை நியூசிலாந்திற்கு எதிரான டெஸ்ட் தொடரின் மூலம் முறியடித்துள்ளார்.

29 வயதான அஸ்வின் 30 டெஸ்ட்டிலேயே இச்சிறப்பினைப் பெற்றிருப்பது பெருமைக்குரியதாகும். இவர் பவுலிங்கில் மட்டும் இல்லாமல் பேட்டிங்கிலும் அசத்தக் கூடியவர். இவர் ஒரு சிறந்த ஆல்ரவுண்டர் ஆவார். இவர் டெஸ்ட் கிரிக்கெட்டில் பவுலிங் மற்றும் ஆல்ரவுண்டர் தரவரிசையில் முதலிடம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

**ரா. முத்துக்குமார்**
M.Phil.,
Media & Communication

# பொது அறிவு

1. உலகில் முதல் கண் வங்கி தொடங்கப்பட்ட நாடு **அமெரிக்கா.**
2. உலக சிரிப்பு தினம் **ஜனவரி 10**
3. உலக தாய்மொழி தினம் **பிப்ரவரி 21**
4. உலக காசநோய் தினம் **மார்ச் 24**
5. உலக ஆரோக்கிய தினம் **ஏப்ரல் 7**
6. உலக செவிலியர் தினம் **மே 12**
7. உலக ரத்ததான தினம் **ஜூன் 14**
8. உலக மக்கள் தொகை தினம் **ஜூலை 11**
9. உலக இருதய தினம் **செப்டம்பர் 23**
10. உலக சுற்றுலா தினம் **செப்டம்பர் 27**
11. உலக சர்க்கரை நோய் தினம் **நவம்பர் 14**
12. உலக அடிமைகள் ஒழிப்பு தினம் **டிசம்பர் 2**
13. இந்தியாவின் மிக நீண்ட பகல் நாள் **ஜூன் 21**
14. இந்தியாவின் மிக குறுகிய பகல் நாள் **டிசம்பர் 22**
15. உலகிலேயே துணியில் செய்தித்தாள் வெளியிடும் நாடு **ஸ்பெயின்**
16. இரண்டு பிரதமர்களைக் கொண்ட நாடு **சான்மரீனோ**
17. இந்தியா தனது வானொலி ஒளிபரப்பை தொடங்கிய ஆண்டு **1927**
18. **கரூர்** மாவட்டத்தில் தமிழ்நாடு காகித ஆலை உள்ளது.
19. தமிழ் மாதத்தின் 32 நாட்கள் உள்ள மாதம் **ஆனி**
20. தமிழ் மொழியின் மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை **247**
21. ஆங்கில மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **26**
22. ஸ்பெயின் மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **27**
23. இத்தாலி மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **20**
24. அரபு மொழியின் மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை **28**
25. லத்தீன் மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிகைகை **22**
26. துருக்கிய மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **28**
27. கிரேக்க மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **24**
28. பாரசீக மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **31**
29. ஜெர்மானிய மொழியின் மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை **48**
30. பிரெஞ்சு மொழியின் மொத்த எழுத்துக் களின் எண்ணிக்கை **26**
31. சீன மொழியின் மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை 214

**மு. ரம்யா**
M.Phil.,
Media & Communication

# Organ Donation




Tamil nadu state has topped in organ donation in the country by harvesting organs of 683 persons and donating theme to over 3000 beneficiaries.

It was announced by state Health Minister C. Vijaya Bhaskar after state observed organ donation day on 13th August 2015. In Tamil Nadu, the overall organ transplantations included 144 heart transplants, 636 liver transplants, 4 panereas, 618 heart valves, 2 small bowls, 1,032 cornea, 22 skin and 2 blood vessels.

The success of the voluntarily organ donation in the state has been attributed of Transplant authority of Tamil Nadu (TATN) which was established in 2008. The TATN had played pivotal rale in streamlining organ transplantation in the state.

**Powniya. K.**
I-MJMC

# மன அழுத்தம் தடுக்கும் வழிமுறைகள்



மன அழுத்தத்தினால் அதிகம் பாதிக்கப் படுவது ஆண்களை விட பெண்களே என்பது மருத்துவர்களின் கணிப்பு. இது தூக்கமின்மையாலும் மன அழுத்தம் வர காரணமாக இருக்கிறது.

**மன அழுத்தம்:**

நம்முடைய மூளையில் செரட்டோனின் டோப்பமின் என்ற ரசாயனப் பொருட்கள் சுரக்கின்றன. இவற்றின் அளவு சமநிலையில் இல்லாததால் பிரச்சனை ஏற்படுகிறது. இது எல்லோருக்கும் பயம், படபடப்பு தானாகவே குறைந்து மன அழுத்தம் இல்லாமல் போகின்றது. இது எல்லோருக்கும் சாத்தியமல்ல. மன அழுத்தம் உள்ளவர்களுக்கு மருத்துவர்கள் மருந்துகளைப் பரிந்துரைப்பார்கள். இது செரட்டோனின், டோப்பமின் போன்ற ரசாயனப் பொருட்களின் சுரப்பை குறைவாகவோ, கூடுதலாகவோ சுரக்கவிடாமல் சமநிலையில் வைத்திருக்கும்.

**வருமுன் காப்போம்**

உடற்பயிற்சி
யோகா
தனிமையைத் தவிர்த்தல்
இசை, புத்தகம்
உணவு
தியானம்
முறையான மருத்துவ அணுகுமுறை

மன அழுத்தம் வருவதற்கு சில நேரங்களில் நாமே காரணமாகிறோம். மேற்கண்ட விஷயங்கள் நாம் கடைப்பிடிப்போமானால், மனஅழுத்தத்தினை தவிர்க்க நம்மால் முடியும். மன அழுத்தத்தைக் குறைக்க, மனக் கவலையை மறந்திடுவதே முதன்மையான வழியாகும்.

**போ. ரவினா**
II MJMC

# இந்தியாவில் முதல் பெண் போட்டோகிராபர்



இந்தியாவின் முதல் பெண் போட்டோகிராபர் ஹோமாய் வியாரவல்லா ஆவார். இவர் 1913-ம் ஆண்டு டிசம்பர் 9ந் தேதி பிறந்தார். சுதந்திர இந்தியாவில் செங்கோட்டையில் நடந்த முதல் கொடியேற்றத்தைப் படம் பிடித்தவர் என்ற பெருமை இவரைச் சாரும்.

இந்திராகாந்தி, தன் தந்தை நேருவுடன் இருந்த தருணங்கள். நேரு லால்பகதூர் சாஸ்திரி ஆகியோரின் இறுதி நிமிடங்கள். இரண்டாம் உலகப் போருக்கான தயாரிப்புகள். ஜாக்குலின் இந்திய வருகை, 1956-ல் தலாய் லாமாவின் முதல் காங்கிரஸ் கூட்டம். மவுண்ட் பேட்டன் பிரபு, கவர்னர் ஜெனரலாகப் பதவி ஏற்ற தருணம், பிரதமர் பதவி ஏற்ற பின் நேரு நிகழ்த்திய உரை. வெளிநாட்டு தலைவர்களின் பெருமைகள் என பல வரலாற்று சம்பவங்களை பதிவு செய்துள்ளார்.

பெண்களை பள்ளிக்கூடத்திற்கு கூட அனுப்பாத அந்தக் காலகட்டத்தில் இவர் மும்பையில் புகழ்பெற்ற ஜே.ஜே. காலேஜ் ஆப் ஆர்ட்சில் தனது பட்டிய படிப்பை முடித்துள்ளார். இந்தியாவில் உள்ள அனைத்து தலைவர்களையும் படம் எடுத்த சாதனை ஹோமாய் வியாரவல்லாவை சாரும்.

சுதந்திர இந்தியாவின் முதல் நொடியில் இருந்து கடைசி நொடிகள் வரையில் படம் எடுத்த இவர் மகாத்மா காந்தியின் இறுதி நொடிகளைப் படம் எடுக்க முடியவில்லை. அதுதான் அவரது வாழ்க்கையில் மிகப் பெரிய வருத்தமாக அமைந்தது.

காந்தி சுட்டுக் கொல்லப்பட்டு அன்று காலை அவரது அசிரக் கூட்டத்தை பதிவு செய்வதற்காகக் கிளம்பிய அவரை அவர் கணவர் போகவிடாமல் தடுத்துவிட்டார். அதனால் தான் மகாத்மா காந்தியின் கடைசி நொடிகளை அவர் பதிவு செய்ய முடியவில்லை.


மகாத்மா காந்தியின் கடைசி நொடிகளை பதிவு செய்ய முடியவில்லை என்பதால் அதனை ஈடு செய்யும் வண்ணமாக காந்தியின் அஸ்தியைக் கரைப்பதற்காகக் கொண்டு சென்றபோது, அவர் எடுத்த படங்கள் சாகாவரம் பெற்றவை.

மகாத்மா காந்தியின் அஸ்தியை காணக் குவிந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தையும் அவர்களாக உணர்வையும் படங்களாக பதிவு செய்தார். 1970ல் ஹோமாயின் கணவர் காலமானார். அதன் பிறகு ஹோமாய் தனது போட்டோகிராபி தொழிலைக் கைவிட்டுவிட்டார்.

2012ம் ஆண்டு ஜனவரியில் அவர் மறைந்தார். அவருடைய படங்கள் இன்றும் பேசுகின்றன.

S. ராஜ்குமார்
II MJMC

## நகைச்சுவை



அமெரிக்கக்காரன் உலகில் திருட்டு நடக்கிறது என திருடனை கண்டுபிடிக்க மிஷின் கண்டு பிடிச்சான். அதை அமெரிக்காவில் வைத்த பொழுது 30 நிமிடத்தில் 50 திருடர்களை கண்டு பிடித்தது. அதே மிஷினை இங்கிலாந்தில் 40 நிமிடத்தில் 80 திருடர்களைக் கண்டுபிடித்தது. அதே மிஷினை இந்தியாவில் வைத்ததில் மிஷினை காணுமாம்.

★ ★ ★

**ஆசிரியர்:** உன் பக்கத்துல தூங்குறவன எழுப்பு.

**மாணவன்:** நீங்கதான் தூங்க வைச்சீங்க நீங்களே எழுப்புங்க.

★ ★ ★

**ஆசிரியர்:** கண்ணகி மதுரையை எரித்தாள். இது என்ன காலம்.

**மாணவன்:** தீயணைப்புத் துறை இல்லாத காலம்.

★ ★ ★

**நண்பன் 1:** என்ன இரவு முழுவதும் விழுந்து விழுந்து படித்து ஏன் பெயில் ஆன?

**நண்பன் 2:** ஏனா நான் படித்தது பேஸ்புக்.

**K. கார்த்தி**
II MJMC









## Noble Prize Winners – 2016

**Physics**

David J. Thouless
F. Duncan
M. Haldane
J. Micheal Kosterlitz


For Theoritical discoveries of topological phase, transitions and topological phases of matter.

**Chemistry**

Jean-pierre Sauvage
Sir J. Fraser Stoddart
Bernard L. Feringa

For the design and synthesis of molecular machines.


  

**Physiology (or) Medicine:**



Yashinori Oshumi for his discoveries of Mechanisms for autophagy.

**Literature**



Bob Dylan – for having created new poetic expressions within the great American song tradition.

**Peace:**



Juan manuel santos – for his resolute efforts to bring the country's more than 50 year long civil was to an end.

**Gowsalya M.**
I MJMC

## Ten Golden Principles

1. Think wisely
2. Observe carefully
3. Speak purposefully
4. Plan timely
5. Listen patiently
6. Act smartly
7. Decide calmly
8. Move Freely
9. Praise Lavishly
10. Lead successfully

**Vijayaraj**
M.Phil., Media & Communication

# Rhymes from the heart

### History


My most favorite subject is history,
but why to learn so many things
which are of past when we are liking
in persent.

History is interesting, but sometimes
learning so many dates are very
irritating
The heroic deeds of past people and
those wars, do not stay in my
Memory.

My dear history, you are my life's
biggest mystery,
just remain where you are and never
come in present.

**Vijayalaxmi Arumugam**
II, MJMC

## அறிந்து கொள்வோம்!



### ஆசியாவின் முதல் தேசிய பூங்கா

டேராடூனில் உள்ள ஜீம்கார்பெட் பூங்கா இது இந்தியாவின் பழைமையான பூங்காவாகும். 1936-ல் தொடங்கப்பட்டது. அன்றைய காலத்தில் இந்த பூங்காவின் பெயர் ஹெய்லி தேசிய பூங்கா. இங்குதான் முதன் முதலில் புலிகளை பாதுகாக்கும் மையம் தொடங்கப்பட்டது.

இந்த பூங்கா 201 மைல் பரப்பளவு கொண்டது. 19ஆம் நூற்றாண்டை சேர்ந்த பிரிட்டிஷ் அதிகாரி மேஜர்ரம்சே இவர்தான் முதன்முதலில் 1868இல் இந்த வனப்பகுதியை பாதுகாக்க வனத்துறை கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். ஆனால் 1879இல் தான் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிக்கப்பட்டது. இந்த பூங்கா 1936-ல் தான் பிரிட்டிஷ் அரசால் தேசிய பங்காவாக அறிவிக்கப்பட்டது. இப்பூங்கா பழம்பெரும் புகழ்மிக்க பூங்காவாக திகழ்கிறது.

-SM. ரஞ்சிதா
II MJMC

## முயற்சி செய்வோம்

சிறுவனாக இருக்கும்போது எழுந்து நடக்க
**முயற்சி செய்!**

வளர வளர நல்ல பண்புகள் கற்றுக் கொள்ள
**முயற்சி செய்!**

தாய் தந்தையிடம் நண்பனாக இருக்க
**முயற்சி செய்!**

நண்பனிடம் உண்மையாக இருக்க
**முயற்சி செய்!**

நாம் பேசும் போது பிறர் மனம் புண்படாம இருக்க
**முயற்சி செய்!**

நன்மை தீமை என்று எடுத்துக் கொள்ள
**முயற்சி செய்!**

கல்வி என்ற பெரிய கடலை கற்க
**முயற்சி செய்!**

நாம் நாமாகவே எப்போதும் இருக்க
**முயற்சி செய்!**

தீமையை கண்டு கலங்காமல் அதிலும் நன்மை
தான் என்று **முயற்சி செய்!**

பிரிவு என்பது இருக்கும் அனைவரின் வாழ்வில்
அதை ஏற்றுக்கொள்ள **முயற்சி செய்!**

சொல்லும் சொல்லையும் செய்யும் செயலை
சரியாக இருக்க **முயற்சி செய்!**

இருப்பதை வைத்து வாழ **முயற்சி செய்!**

இன்பத்தை கடலை போன்றும் துன்பத்தை கானல்
நீர் போன்றும் வைத்துக் கொள்ள
**முயற்சி செய்!**

-N. கோமதி
II MJMC

## கொய்யாவின் சிறப்பு



தினமும் கொய்யா பழம் சாப்பிடுவது உடல்நலத்திற்கு நன்மையைத் தரும். இந்த கொய்யாவில் தான் ஏ, பி, இ, கே வைட்டமின் உள்ளது. கொய்யாவில் நார்ச்சத்து, மாவுச்சத்து நிறைந்து காணப்படுகிறது. தினமும் கொய்யா பழம் உட்கொண்டால் ரத்தசோகை குணமாகும். மக்னீசியிம் முதலான தாது உப்புகள் உள்ளன. சர்க்கரை நோயாளிகளுக்கு ஏற்ற பழம் தான் கொய்யா. மலச்சிக்கலைப் போக்கும் ஒரு உன்னத மருந்து. கால்சியம் துத்தநாகம் சிறிதளவு உள்ளன. பீட்டாகரோடின், லைசோபீன் சத்துகள் நிறைந்தது. செங்காயாகச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

-S. விக்னேஷ்வரி
II MJMC

## Why? When? How? - It happen-The Celebration of Diwali

Diwali, a traditional festival, the most celebrated festival in India, is also associated as the largest gift giving and shopping festival. People go out their way to Splurge themselves and their loved ones as it associate with prosperity.

Diwali, the "festival of lights" is an ancient Hindu festival in India celebrated in autumn (northern India) or spring (southern India) every year. Thus this festival also celebrate in other countries, Fiji, Guyana, Pakistan, Malaysia, Mauritius, Myanmar, Nepal, Singapore, Sri Lanka, Suriname and Trinidad and Tobago. The festival spiritually signifies the victory of light over darkness, good over evil, knowledge over ignorance, and hope over despair. Its celebration includes millions of lights shining on housetops, outside doors and windows, and around temples in the communities and others countries. The festival preparations and rituals typically extend over a five-day period, but the main festival night of Diwali coincides with the darkest, new moon night of the Hindu Lunisolar month Kartika in Bikram Sambat calendar. In the Gregorian calendar, Diwali night falls between mid-October and mid-November.

The day Before Diwali, people renovate, and decorate their homes. On Diwali night, Hindus dress up in new clothes or their best Outfit, light up lamps and candles (diyas) inside and Outside their home, then they take part in family prayers (pooja) tribute to Lakshmi - the goddess of fertility and prosperity. After prayer, fireworks follow, then a family banquet with Special foods and Sweets, and exchange of gifts between family members, neighborhood, and close friends.

Diwali dates back to ancient times in India, as a festival after the Summer harvest in the Hindu calendar month of Kartika. The festival is mentioned in Sanskrit texts such as the Padma Purana and the Skanda Purana. The lamps (diyas) are mentioned in Skanda Purana to Symbolically represent parts of Sun, the cosmic giver of light and energy to all life.

In India, Diwali has been celebrated for five days with traditional form of Dhanteras(Day 1), Naraka Chaturdasi(Day2), Lakshmi pooja(Day 3), Bali pratipada(day4) and Bhaiya Dooji (Day 5)

The first day celebrates the churning of cosmic Ocean of between the forces of good and evil; this day marks the birthday of Lakshmi - the Goddess of Wealth and Prosperity, and the birthday of Dhanvantari-the God of Health and Healing. On the night of Dhanteras, lamps are ritually kept burning all through the nights in honor of Lakshmi and Dhanvantari. Dhanteras is also a major shopping day, particularly for gold or silver artifacts.

Narak Chaturdasi is the second day of Eve. The Hindu literature narrates that the asura (demon) Narakasura was killed on this day by Krishna, Satyabhama and Kali. The day is celebrated by early morning religious rituals and festivities followed on. Special rituals Such as a fragrant oil bath, women decorate their hand with henna, and preparing homemade Sweets, followed by minor pujas.

The third day is the main festive day. On the evening of Diwali, people open their doors and windows to welcome Lakshmi, and place lights. Some set lamps adrift on rivers and streams. People wear new clothes or their best outfits as the evening approaches. After the puja, people go outside and celebrate by lighting up colorful fireworks. The fireworks signify celebration of Diwali as well a way to chase away evil spirits. Important relationships and friendships are also recognized during the day, by visiting

relatives and friends, head back to a family feast, conversations and exchanging gifts, Sweets and happiness.

The day after Diwali, is celebrated as Padwa. This day ritually celebrates the love and mutual devotion between the wife and husband. The husbands give thoughtful gifts, or elaborate ones to respective spouses. In many regions, newly married daughters with their husbands are invited for special meals. The day after Diwali devotees perform Goverdhan puja in honor of Lord Krishna.

The last day of festival is called Bhai dooj or Bhai tika (Brother's second), where it is the major day of the festival. It celebrates the sister-brother loving relationship, in a spirit similar to Raksha Bandhan but with different rituals. It is a day when women and girls get together, perform a puja with prayers for the well-being of their brothers, then return to a ritual of food-sharing, gift-giving and conversations.


Hindus across the World celebrate Diwali in honor of the defeating Narakasur by Lord Krishna, Lord Vishnu in his 8" incarnation as Krishna destroyed the demon Narakasur. And for the return of Lord Rama, his wife Sita and his brother Lakshmana from exile of 14 years after Rama defeated Ravana. To honor the return of Lord Rama, Sita and Lakshmana from Lanka in Ramayana. Diwali also celebrates the return of Pandavas after 12 years of Vanvas and one year of "Agyatavas" in Mahabharata. In the village of Gokula, many years ago, the people prayed to the god Indra in The complete life of Krishna. They believed that Indra Sent the rains. Which made their crops, grow. These honor worships are said in Some Hindu Myths and Epics.

Diwali is also celebrated by other religious, Jains, Sikhs and Some Buddhists to mark different historical events, stories but they all symbolize the victory of light over darkness, knowledge over ignorance, and good Over evil, hope over despair.

Diwali has special significance in Jainism. Jains celebrate Diwali as a day of remembering Mahavira. On Diwali morning, Nirvan Ladoo is offered after praying to Lord Mahavira in all Jain temples all across the world. And Buddhist, they also celebrate like as the Hindu. Involving worship of Lakshmi and Vishnu during Diwali, reflects the freedom granted in the Mahayana Buddhism tradition to worship any deity.

It is the festival for peace. On this festive occasion, Hindu, Jain and Sikh communities also mark charitable causes, kindness, and for peace. At the international border, every year on Diwali, Indian forces approach Pakistani forces and offer traditional Indian Sweets on the occasion of Diwali. The Pakistani Soldiers anticipating the gesture, return the goodwill with an assortment of Pakistani Sweets.

**Vinoth Nathan. T**
I MJMC



**S. Satheesh**
II MJMC

# ஒருநாள் பயிற்சி பட்டரை



திருச்சி மாநகரில் உள்ள ஜமால் முகமது கல்லூரியில் 22.09.2016 அன்று நடத்திய ஒரு நாள் பயிற்சி பட்டறையில் அழகப்பா பல்கலைக்கழகம், வாழ்நாள் கல்வியியல் துறையைச் சேர்ந்த அனைத்து மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டார்கள்.

கவிஞர் திரு. M.G. ரபீக் அகமது அவர்கள். ஜமால் முகமது கல்லூரியில் ஒருநாள் பயிற்சி பட்டறையை நடத்தினார். அவர் நடத்திய ஒருநாள் பயிற்சிப் பட்டறையில் Collage, Water Color, செய்வது எப்படி என்பது பற்றிக் கற்றுத் தந்தார்.

Collage, Water Color செய்வது பற்றிய விதிமுறைகள் அனைத்தையும் பற்றித் தெரிந்து கொண்டேன்.

Collage என்பது இதழில் வரும் இயற்கை புகைப்படங்கள். புகைப்படங்களை வெட்டி முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும்.


இரண்டாவது முறையை வெட்டிய புகைப்படங்களை ஒட்டும் பசையை பயன்படுத்தி விளம்பர பலகையில் ஒட்ட வேண்டும். புகைப்படத்தை விளம்பரப் பலகையில் ஒட்டுவதற்கு முன்பு பசையில் தேவையான அளவு தண்ணீர் கலந்து கொண்டு பயன்படுத்த வேண்டும். புகைப்படங்கள் ஒட்டுவதில் கற்பனை திறன் வாய்ந்ததவராக இருக்க வேண்டும்.

ஒட்டிய விளம்பர பலகையை சிறிது நேரம் உலர வைக்க வேண்டும். விளம்பர பலகையில் ஒட்டிய புகைப்படங்கள் உலர்ந்த பின்பு அந்த புகைப்படங்களின் ஓரங்களில் கெட்டியான பசையை கொண்டு 'கோட்டிங்' கொடுக்க வேண்டும்.

புகைப்படத்தை சுற்றி 'கோட்டிங்' கொடுத்த பின்பு சிறிது நேரம் உலர வைத்து, புகைப்படத்தை ஒட்டிய பிறகு ஆயில் கொண்டு ஒட்டிய புகைப்படங்களில் தேவையான வண்ணத்தைக் கொடுத்தும் தேவைப்பட்டால் வண்ணத்தை கொண்டு படம் வரைந்து கொள்ளலாம். இறுதியாக 3டி மாதிரியான தோற்றத்தைக் கொடுப்பதற்கு பசையைப் பயன்படுத்தி புகைப்படத்தின் மேற்பகுதியில் கோடுகள் வளைவு நெளிவாகக் கொடுக்க வேண்டும்.

Collage தயாரிப்பதன் முறைகள். இந்த Collage பார்க்கும் போது 3டியில் பார்ப்பது போன்று தோற்றத்தை தரும்.

-M. வெண்ணிலா
II MJMC




-M. Pradeepa
I MJMC

# ஊடகம்

தகவல் தொடர்பில் ஊடகம் என்பது தகவல்களை சேமித்து வழங்க பயன்படுத்தப்படும் கருவிகளாக உதவுகின்றன. இவை 'மக்கள் ஊடகம்' அல்லது செய்தி ஊடகம் என்று குறிப்பிடப்படும்.

**வகைகள்:**

அச்சு, வானொலி, தொலைக்காட்சி, இணையம், செயலிகள்

**அச்சு ஊடகம்:**

அச்சு ஊடகங்களில், இதழ்கள் அல்லது சஞ்சிகைகளை அச்சிட்டு செய்திகளையும் கருத்துகளையும் இயற்கலை படைப்புகளையும் அறியவும் மற்றும் பகிர்ந்து கொள்ளவும், பரப்பவும் வெளிவருகின்றன. அரண்மனை அல்லது அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிவிக்கவே முதன்முதலில் இதழ்கள் தோன்றின. கி.மு. 60ல் எகிப்து நாட்டை ஆண்ட சூலியசீசர் தனது ஆணைகளையும் அரண்மனை செய்திகளையும் எழுதித் தெருக்களில் வைத்தார். இதனை ஆக்டானடர்ணா (அன்றாட நடவடிக்கை) என்றனர். முதல் அச்சு இதழ் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் சீனாவில் வெளியிடப்பட்டது. இதன் பெயர் டிசிங்பவே (அரண்மனை இதழ்).

கி.பி. 1566ல் 'நோட்டிசு கிரிட்டி' என்ற இதழ் இத்தாலிய அரசால் வெளியிடப்பட்டது. இது கையெழுத்து இதழாகும். இதைப் படிக்க கெசட்டா என்ற செப்புக்காசு வழங்க வேண்டும். இதுவே அந்த இதழின் பெயராக மாறியது.

- பெங்கால் கெசட்டு
- மதராஸ் கெசட்டு
- இலண்டன் கெசட்டு
- சிலோன் கெசட்டு

இவ்வாறாக செய்தித்தாள்கள் மற்றும் இதழ்கள் காலத்தின் அடிப்படையில் நாளிதழ்கள் காலை மற்றும் மாலை நாளிதழ்களாகவும், சஞ்சிகைகள், வாரம், மாதம், ஆண்டு




இதழ்களாகவும் வெளிவந்தன. அச்சு ஊடகங்கள் இமாலய வளர்ச்சி பற்று இன்று மின்னிதழ்களாக வெளிவருகின்றன.

**இந்திய வானொலி**

இந்தியாவில் இருக்கும் பெரும்பாலாந வானொலி நிலையங்கள் மத்திய அரசின் பிரசார் பாரதி மூலம் செயல்படும் வானொலி நிலையங்களாகும். இதுபோக, தனியார் நிறுவனங்கள் நடத்தி வரும் பண்பலை வானொலி நிலையங்களும் உள்ளன. இந்தியாவில் வானொலி சேவை 75 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பாரம்பரியம் கொண்டது.

இந்தியாவின் முதல் வானொலி நிலையம் 1927ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மும்பை மற்றும் கல்கத்தாவில் ஒரே நேரத்தில் ஒலிபரப்புச் செய்யப்பட்டது. 1936ஆம் ஆண்டில் இருந்து, வானொலி அகில இந்திய ஒலிபரப்பில் காலூன்றியது. 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடையும் போது 6 வனொலி நிலையங்களும், 18 டிரான்மிட்டர்களும் இருந்தன. மேலும் 11% மக்கள் வானொலி ஒலிபரப்பைக் கேட்டனர்.

இன்று நாடு முழுவதும் 208 ஒலிபரப்பு நிலையங்களும், 326 டிரான்மிட்டர்களும் உள்ளன. அகில இந்திய வானொலி 24 இந்திய மொழிகளில் தனது உள்நாட்டு ஒலிபரப்பை நடத்தி வருகிறது. மேலும் ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன் போன்ற அயல்நாட்டு மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது.

-V. ரமாதேவி
II MJMC

# கிராமப்புற வளர்ச்சியில் மாணவ மாணவிகள்

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் சார்பில் கிராமப்புறங்களை தூய்மைப்படுத்தும் முகாமில் மாணவ-மாணவிகள் கலந்துகொண்டனர். கிராமப் புறங்களில் அன்றாட வசதிக்கான பொது இடங்களை தூய்மைப்படுத்தும் பணியில் மூன்றுநாள் அமர்வு முகாமில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் கல்வியியல் துறையின் மாணவ- மாணவிகள் கலந்துகொண்டனர்.

வடகுடி கிராமத்தின் அன்றாட வசதிக்கான குளம், பொதுக்கிணறு போன்ற இடங்களை சுத்தம் செய்து, முக்கிய இடங்களான தொடக்கப்பள்ளி, சமுதாயக்கூடம், அங்கன்வாடிமையம், நூலகக்கட்டிடம், கோவில்கள், நகரத்தார் விடுதி, ஊராட்சி கட்டிடம், வாய்க்கால்கள், ரோடுகள் போன்ற இடங்களையும் சுத்தம் செய்தார்கள்.

மேலும் இவ்வூர் பொதுமக்களுக்கு உதவும் வகையில் மருத்துவ விழிப்புணர்வு முகாம், தியான பயிற்சிகள், கலைநிகழ்ச்சிகள், சமூக மாணவ- மாணவிகள் சமூக பொருளாதார நிலையைப் பற்றி கணக்கெடுத்தல், சட்ட விழிப்புணர்வு முகாம் மற்றும் விளையாட்டு போட்டிகளும் நடைபெற்றன.

இவ்வூர் செழுமை பெற அழகப்பா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சொ. சுப்பையா அவர்கள் ஊர்மக்கள் முன்னிலையில் மரக்கன்றுகள் நடும் விழாவில் பங்கேற்றனர். மேலும் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் வி.பாலசந்திரன் அவர்கள் மற்றும் ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் எ. நாராயணமூர்த்தி அவர்களும் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்களும், துறைத்தலைவர்களும் மாணவ- மாணவிகளும் மற்றும் ஊர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன்பின் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் கூறியதாவது, ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்று கிராம அமர்வு முகாம் மூலம் கிராமங்கள் பாதுகாக்கப்படும் என்றும் பலைக்கலைக்கழகத்தின் சார்பில் கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் பல்கலைக்கழகத்தின் என்.எஸ்.எஸ். சார்பில் கண்காணிக்கப்படும் என்றும் கூறினார்.

ம. பார்த்திபன்
II MJMC

# 2106 ஒரு கண்ணோட்டம்

ஆயிரம் ஆயிரம் வருடங்கள் கடந்தாலும் நம் மனதில் சில வருடங்களின் நினைவுகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. எவ்வளவு சந்தோஷம் இருந்தாலும், வருத்தங்களும் சரிக்கு நிகராக இருக்கத்தான் செய்கின்றது. பாரா ஒலிம்பிக்கிஸ் மூலம் உலகத்தையே திரும்பிப் பார்க்க வைத்த மாரிமுத்து தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதில் பெருமிதம் அடைகின்றேன். ஐ4, ஐ7 மாடல் மொபைல் அறிமுகப்படுத்தப்பட்டதும் இந்த ஆண்டில்தான். விசாராணை படம் ஆஸ்கர் விருதிற்காக பரிந்துரை செய்யப்பட்டது. ஜியோ சிம் 4ஜி என்ற அலைகற்றைகள் மூலம் உலகத்தை அதனுள் அடக்கிய ஆண்டும் 2016 தான். முதன் முதலில் தமிழில் உருவாக்கப்பட்ட கபாலி திரைப்படம் 128 நாடுகளில் திரையிடப்பட்ட பெருமையும் இவ்வாண்டில்தான். பீலே என்ற ஆங்கில திரைப்படத்திற்கு தமிழ்நாட்டைச் சேர்ந்த இசை அமைப்பாளர் ஏஆர். ரஹ்மான் அவர்கள் ஆஸ்கார் விருதினை பெற்றார். நடிகர் சங்கத்திற்கு முதன்முதலில் தேர்தல் நடத்தி தமிழ் நடிகர் சங்கத்தில் புரட்சியை ஏற்படுத்தியதும் 2016ல்தான்.

தள்ளிப்போகாதே பாடல் 50 மில்லியன் ரசிகர்களுக்கு இடையே அதிக வரவேற்பைப் பெற்றது. நடிகர் சங்கத்தில் இருந்து சரத்துக்குமார் மற்றும் ராதாரவி இருவரும் நீக்கப்பட்டனர். எவ்வளவு சந்தோசங்களைக் கடந்து வந்தாலும் தமிழ்நாடு முழுவதும் சோக வெள்ளத்தில் மூழ்கியது மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ. ஜெயலலிதா அம்மா அவர்களின் இறப்பினால். அழியா சுவடுகளை 2016-ம் ஆண்டு உருவாக்கியது. மக்கள் சோக வெள்ளத்தில் இருக்கின்ற தருணத்தில் 'வர்தா' புயல் மக்களை பதற வைத்தது. பிரபல நடிகர் சோ. ராமசாமி அவர்களின் இழப்பு நடிகர் குடும்பத்தில் ஆழ்ந்த வருத்தத்திற்கு கொண்டு சென்றது. 42வது திரைப்படத் திருவிழா கோவாவில் நடைபெற்றது. அதில் ஹாலிவுட், பாலிவுட், கோலிவுட் என அனைத்துப் படங்களும் திரையிடப்பட்டன. அதில் விசாரணை மற்றும் இறுதிச்சுற்று திரைப்படம் திரையிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதற்கெல்லாம் உச்சகட்டமாக இந்தியாவை அதிரவைத்தது 500, 1000 ரூபாய் செல்லாமல் போனதுதான். அதிர்ச்சியுடனே 2017ஆம் ஆண்டை நோக்கி மகிழ்ச்சியை தேடி பயணம் செய்கின்றோம்.

பி. திவ்ய பாரதி
II MJMC

# இணையம் காணும் வெள்ளி விழா

**இணையம்:**

இணையம் என்பது வைய விரிவலையை தாங்கிப் பிடிக்கும் கட்டமைப்பாகும். கேபிள்கள், கம்ப்யூட்டர்கள், சர்வர்கள் மற்றும் அவை சார்ந்த அனைத்தும் இணைந்த கட்டமைப்பே இணையமாகும். பல நெட்வொர்க்குகள் இணைந்ததே இணையம்.

**உருவான கதை**

'நம் வாழ்க்கை இனி இணையம் இல்லாமல் இயங்க முடியாது' என்ற நிலைக்கு நாம் வந்துவிட்டோம். ஒட்டுமொத்த மனித இனத்தின் அறிவைத் தேக்கி வைத்திருக்கும் இடமாக இன்று இணையம் உயர்ந்திருக்கிறது. இணையம் இங்குதான் நாம் பார்க்காமலேயே அதிக மனிதர்களைச் சந்திக்கிறோம். உரையாடுகிறோம். நேரில் சந்திக்காத மனிதர்களை உறவாகக் கொண்டு உரையாடி அன்பு செலுத்துகிறோம்.

நம் எண்ணங்களை இந்த உலகு அறியத் தருகிறோம்; நம் உணவை, நமக்குத் தேவையான பொருட்களை வாங்குகிறோம். நம் தொழில்/சேவையை மேற்கொள்கிறோம். நம் வருமானத்தை நிர்வகிக்கிறோம். இதில் தான் வசிக்கிறோம். இதனையே சுவாசிக்கிறோம். இந்த அளவிற்கு நம்மை கட்டிப்போட்டு, அதன் உலகில் நம்மை வரவழைத்து, புதிய பரிமாணத்தை வழங்கிய இணையம் 1991இல் செயல்படத் தொடங்கி சென்ற ஆகஸ்டு 6 அன்று, தன் துடிப்புள்ள உயிரோட்டத்தில் 25 (வெள்ளி விழா) ஆண்டு கண்டுள்ளது.

முதல் இணையதளத்தையும் அதனைத் தேடி அறிய பிரவுசரையும் (Browser) தந்தவர்கள் டிம் பெர்னர்ஸ் லீ மற்றும் இணைய வல்லுநர்கள் ஆவர். URL, HTML மற்றும் HTTP முதலியவற்றையும் உருவாக்கியவர்கள் அவர்களே. தகவலைத் தேடி அறிய களஞ்சியமாக வடிவமைக்கப்பட்ட இது, 1989ல் பணியாற்றத் தொடங்கி, 1990ல் சோதனை செய்யப்பட்டது. இணைய தகவல்களை எப்படி அறிவது என்ற கேள்விக்கு விடையை யாஹூ (Yahoo) தந்தது. ஸ்டான்போர்டு பல்கலைக் கழகத்தின் மாணவர் ஜெர்ரி யங் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர் டேவிட் பைலோ இணைந்து இணையதளங்களின் பட்டியலை உருவாக்கினார்கள். வகைவகையாக இணையதளங்களைப் பிரித்துக் காட்டினார்கள். இணையத்தின் டைரக்டரியாக அப்பட்டியல் இருந்தது.

பின்னர் டிஜிட்டல் எக்விப் மெண்ட் கார்ப்பரேஷன் (DEC), அல்டா விஸ்டா (Alta Vista), கூகுள் (Google) என தேடல் சாதனங்கள் இமாலய சேவை அளித்து வருகிறது. உலகின் அனைத்து சர்வர்களையும் உள்ளடக்கிய உலக வையவிரிவலை (World Wide Web) செயல்பட்டு வருகிறது.

**உபயோகம்:**

தற்போது வரை ஏறத்தாழ பத்து கோடி இணையதளங்கள் இயங்குகின்றன. 340 கோடி மக்கள் தினந்தோறும் இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

ஒவ்வொரு நிமிடத்திலும் பல கோடி கணக்கில் தகவல்கள் அனுப்பப்படுகின்றன. பல கோடிப் படங்கள் பரிமாறிக் கொள்ளப் படுகின்றன. குறைந்தது 1.5 கோடி டாலர் மதிப்பில் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது. இன்று இணையத்தில் அதிக ஆதிக்கம் செலுத்துவது, சமூக வலைத்தளங்களே. அடுத்தபடியாக தேடல் பொறிகளும், வர்த்தகத் தளங்களும் உள்ளன.

**இணையத்தின் மாயம்:**

நிலையாக இணையதளங்கள் இருந்த நிலை மாறி, நம்முடன் பேசி உறவு கொள்ளும் இணையதளங்கள் உயிர்த்துடிப்புடன் இயங்குகின்றன. ஆங்கிலம் மட்டுமே இணைய மொழியாக இருந்த நிலைமாறி உலகின் அனைத்து மொழிகளும் இணைய மொழிகளாக உள்ளன.

கம்ப்யூட்டரிலிருந்து சற்று விலகி, பல மொபைல் சாதனங்கள் வழியாக மக்களை சென்றடைகிறது இந்த இணையம். எங்கும் எதிலும் இணையம் என்று நம் அன்றாட வாழ்வின் அனைத்தும் இணையத்துடன் இணைக்கப்பட்டு சிக்கலற்றதாக மாற்றப்பட் டுள்ளது.

**இணையத்தில் இந்தியா:**

உலகில் மிகச் சிறந்த சாப்ட்வேர் (Software) நிறுவனங்கள் இந்தியாவில்தான் இயங்குகின்றன. இன்னும் 86.4 கோடி இந்தியர்கள் இணைய இணைப்பின்றி

வாழ்கின்றனர். 27% ஆண்கள் மற்றும் 17% பெண்கள் மட்டுமே இணையத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

இணைய உபயோகம் இந்தியா

| ஆண்டு | மக்கள் தொகை | உபயோகிப்பவர்கள் |
|---|---|---|
| 2000 | 105,34,81,072 | 0.5% |
| 2012 | 126,35,89,639 | 12.6% |
| 2016 | 1,32,68,01,576 | 34.8% |

ஜூலை

1995 ஆகஸ்டு 15 அன்று VSNL என்ற நிறுவனத்தால் இந்தியாவில் இணைய சேவை தொடங்கப்பட்டது. அப்போது பொதுத்துறை நிறுவனமாக இருந்த விதேஷ் சஞ்சார் நிகாம் நிறுவனம் இதனை வழங்கியது. அதற்கென Gateway Internet Access Service (GIAS) என்றொரு பிரிவினை அமைத்து இணைய இணைப்பினை வழங்கியது. ஆறு மாதத்தில் 10 ஆயிரம் பேர் இணைப்புப் பெற்றனர். முதலில் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மட்டுமே இணைய இணைப்புப் பெற்றன. தொடக்கத்தில் விநாடிக்கு 9.6 கிலோ பிட்ஸ் (KB) என்ற அளவில தொடங்கிய இணைய அமைப்பு மிக வேகமாக வளர்ந்து மெகா பிட்ஸ் (MB) அளவை எட்டியுள்ளது.

V. ரமாதேவி
II MJMC

# Poetry – Social Media

The world conceited, that's easy to see people as a whole living egotistically.

We live in an era of self image, self-lust we create a fabric VOF our livers that's just not us.

We show ourselves as beautiful and hide from the flaws.

When the flaws are what make us, no matter how small.

So stop living behind a vanity screen and face the world with out tear.

Someone wild find you beautiful, the love of your life, drawn near.

To the flaws and imperfections they can't see behind a screen.

Taking selfies isn't helping.

Your're somebody's dream.

**P. Priyadharshini**
II, MJMC

# சிறுகதை

பல்லாயிரம் பேர் கூடியிருந்த கூட்டத்தில் ஒரு சொற்பொழிவாளர் 2000 ரூபாய் நோட்டைக் காட்டி யாருக்கு இது பிடிக்கும் எனக் கேட்டார்.

கூடியிருந்த அனைவரும் தனக்கு என்று அனைவரும் கைகளை உயர்த்தினார்கள். உடனே அந்தச் சொற்பொழிவாளர் உங்களில் ஒருவருக்கு இந்த 2000 ரூபாய் நோட்டைத் தருகின்றேன் என்று சொல்லி, ஆனால் அதற்கு முன் அந்த 2000 ரூபாய் நோட்டைக் கசக்கிச் சுருட்டினார். பிறகு அதைச் சரி செய்து இப்போது இந்த 2000 ரூபாய் யாருக்கு வேண்டும் என்றார் திரும்பவும். அனைவரும் கைகளை உயர்த்தினார்கள். அவர் அந்த ரூபாய் நோட்டைத் தரையில் போட்டு தேய்த்து அந்த அழுக்கான நோட்டைக் காட்டி, இன்னும் இதன் மேல் உங்களுக்கு விருப்பம் இருக்கிறதா? என்றார். அனைவரும் இப்போதும் கைகளை உயர்த்தினர்.

அவர் தொடர்ந்தார். ஒரு 2000 ரூபாய்த் தாள் பலமுறை கசக்கியும், அழுக்கடைந்தும் அதன் மதிப்பை இழக்கவில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் அவமானப்படும்போதும், தோல்விகளைச் சந்திக்கும் போதும் மனமுடைந்து போய் நம்மை நாமே தாழ்த்திக் கொள்கிறோம். தோல்விகளினால் நம்முடைய மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை. நாம் தனித்துவமானவர்கள் என்றார்.

இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்தன்மை இருக்கும். அதன் மதிப்பு என்றைக்கும் குறைவதில்லை. வாழ்க்கை என்ற பயிர்க்கும் தைரியமும் தன்னம்பிக்கையும் இழக்காமல் வாழுங்கள்.

**K. தினேஷ்பாபு,**
II MJMC

**HERE'S THE HEART OF THE MATTER: THE ESSENCE OF SOCIAL MEDIA IS KNOWING YOUR AUDIENCES AND ENGAGING THEM IN SOMETHING THEY LOVE.**




Poocharam Prints, KKDI. Ph: 9884712091